CC.No.428/2023

**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை: திரு. K. இன்பகார்த்திக், B.A., L.L.M.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திண்டுக்கல்.

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 428/2023**

C.N.R. No.TNDG03-044036-2023

குற்றமுறையிடுபவர் : தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலைய
குற்ற எண்.156/2023

எதிரியின் பெயர் : லட்சுமணன், வயது 48/2023
த/பெ. பெருமாள் பிள்ளை,
ஓடைப்பட்டி பிரிவு, சீலமந்தாடி அஞ்சல்,
சீலப்பாடி, திண்டுக்கல் மாவட்டம்.

**குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106ன் கீழ்கண்ட அட்டவணை இணைக்கப்படுகிறது.**

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | வழக்கு எண் | CC.No.428/2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழக அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தாடிக்கொம்பு காவல் நிலைய<br>குற்ற எண்.156/2023 |
| 3. | எதிரியின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | லட்சுமணன், வயது 48/2023<br>த/பெ. பெருமாள் பிள்ளை,<br>ஓடைப்பட்டி பிரிவு,<br>சீலமந்தாடி அஞ்சல்,<br>சீலப்பாடி, திண்டுக்கல் மாவட்டம். |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 04.05.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 04.05.2023 |
| 6. | எதிரியை கைது செய்யப்பட்ட நாள் | கைது நாள் : 07.05.2023 |

| | | |
|---|---|---|
| | மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | பிணை நாள் : 07.05.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 15.05.2023 |
| 8. | குற்றத்தின் சாராம்சம் குறித்து வினவப்பட்ட நாள் | 02.04.2024 |
| 9. | விசாரணை தொடங்கிய தேதி | 02.04.2024 |
| 10. | விசாரணை முடிவுற்ற தேதி | 02.06.2026 |
| 11. | தீர்ப்பு அல்லது உத்தரவின் தேதி | 05.06.2026 |
| 12. | காலதாமத்தின் விளக்கம் | இல்லை |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021ம் தேதியிட்ட சுற்றிக்கையான R.O.C.No.814/2020/RG/F1(P.DIS.No.36/2021) உத்திரவின்படி case summary கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | The Period of Remand of the Accused | -- | | | |
| 2. | The Date of filing of the complainant/Final Report in the Court | 04.05.2023 – 20.06.2023 | | | |
| 3. | The Date of Committal of the Case to the Court of Session. | – | | | |
| 4. | The Date of Questioning of the Accused U/s. 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be | 02.04.2024 | | | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions u/s. 317 of the Code | Nil | | | |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | | Chief | : | Cross |
| | | PW1,2,3,4 | 11.11.2025 | : | 11.11.2025 |
| | | PW5,6 | 20.11.2025 | : | 20.11.2025 |
| | | PW7 | 05.02.2026 | : | 05.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | PW8 | 19.02.2026 | : | 19.02.2026 |
| | | PW9 | 21.05.2026 | : | 21.05.2026 |
| 7. | Date of examination of the accused u/s. 351 BNSS of the Code | 25.05.2026 | | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be, and | Nil | | | |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil | | | |

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக 02.06.2026 ஆம் தேதியன்று வந்தபோது, தமிழக அரசுக்காக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.M.விஜயேந்திரன் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.பாலச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீ ர் ப் பு ரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :–**

கடந்த 04.05.2023–ம் தேதி காலை 8.30 மணியளவில் தாடிக்கொம்பு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழைய கரூர்–திண்டுக்கல் ரோட்டில் ஜெயா பாலி கிளினிக் அருகே இவ்வழக்கின் புகார்தாரர் திரு.ஜான் கிறிஸ்டியனின் மனைவியான திருமதி.லில்லி புளோரா மேற்படி ரோட்டின் ஓரமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரி TN 57 CX 4546 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பில்டு புல்லட்டை மேற்படி ரோட்டில் மேற்படி லில்லி புளோராவிற்குப் பின்னால் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிச் சென்று மேற்படி லில்லி புளோரா மீது மோதி விபத்து ஏற்படுத்தி மேற்படி லில்லி புளோராவிற்கு மரணத்தை விளைவித்துள்ளார். எனவே, தாடிக்கொம்பு காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது

இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)—ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.428/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர், இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)—ன் படியான இவ்வழக்கு குற்றத்தின் சாராம்சத்தை எதிரிக்கு விளக்கி கூறி வினவிய போது, எதிரி பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். விசாரணைக்காக மேற்படி நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில், இந்நீதிமன்றம் 12.09.2025ம் தேதி ROC.No.52/2025/SHR வாயிலாக BNSS பிரிவு 450ன் கீழ் பிறப்பித்த உத்தரவின் படி, இவ்வழக்கானது திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.2—லிருந்து பெறப்பட்டு இந்நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**3.** இந்நீதிமன்ற விசாரணையின் போது, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :—**

i. இவ்வழக்கின் புகார்தாரரான திரு.ஜான் கிறிஸ்டியன்(அ.சா.1) திண்டுக்கல், பழைய கரூர் ரோட்டிலுள்ள GTN கல்லூரிக்கு எதிரிலுள்ள 126, ஸ்ரீமகாத்மா நகர் என்ற முகரியில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். கடந்த 04.05.2023ம் தேதி காலை 8.30 மணியளவில் மேற்படி லில்லி புளோரா பழைய கரூர்—திண்டுக்கல் ரோட்டில் ஜெயா பாலி கிளினிக் அருகே வடக்கிலிருந்து தெற்காக ரோட்டின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அவருக்குப் பின்னால் TN 57 CX 4546

என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பில்டு புல்லட்டை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மேற்படி லில்லி புளோரா மீது மோதியதில், மேற்படி லில்லி புளோரா கீழே விழுந்ததில் அவரது தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

ii. மேற்படி விபத்தை நேரில் பார்த்த திரு.தவாசாம் ஜோபு(அ.சா.2) காயம்பட்ட லில்லி புளோராவை அங்கிருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார். மேற்படி மருத்துவமனையில் லில்லி புளோராவை பரிசோதனை செய்த மருத்துவர் மேற்படி லில்லி புளோரா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். பின்னர், மேற்படி திரு.தவாசாம்ஜோபு விபத்து பற்றியும், லில்லி புளோரா இறந்து விட்டது பற்றியும், ஜான் கிறிஸ்டியனுக்கு தகவல் கொடுத்துள்ளார். மேற்படி தகவலைப் பெற்ற ஜான் கிறிஸ்டியன் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்று மேற்படி மருத்துவமனை சவங்கிடங்கில் இருந்த லில்லிபுளோராவின் பிரேதத்தைப் பார்த்துவிட்டு, பின்னர் காலை 10.30 மணியளவில் தாடிக்கொம்பு காவல் நிலையம் சென்று விபத்து பற்றி ஒரு புகார் மனு(அ.சா.ஆ.1) கொடுத்துள்ளார்.

iii. மேற்படி புகார் மனுவைப் பெற்ற தாடிக்கொம்பு காவல் நிலைய ஆய்வாளர் திரு.பிரபாகரன்(அ.சா.8) மேற்படி புகார் மனுவின் படி தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண்.156/2023 இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)−ன் படி முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.4) பதிவு செய்து வழக்கு கோப்பினை விசாரணைக்காக ஆய்வாளர் திரு.பாலாண்டி(அ.சா.9) அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திருபாலாண்டி காலை 11.30 மணியளவில் விபத்து நடந்த இடத்திற்கு சென்று சாட்சிகள் திரு.ராஜ்குமார்(அ.சா.3) மற்றும் திரு.ராபர்ட் பெலார்மின்(அ.சா.6)

ஆகியோர் முன்னிலையில் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்(அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம்(அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளார். பின்னர், புகார்தாரர் ஜான்கிறிஸ்டியன், விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளான திரு.தவாசாம் ஜோபு, திருவேளாங்கன்னி(அ.சா.3), விபத்து பற்றி கேள்விப்பட்ட சாட்சியான திரு.சாலமன் ஆலன் ரூபன்(அ.சா.5), பார்வை மகஜர் சாட்சிகளான திரு.ராஜகுமார் மற்றும் திரு.ராபர்ட் பெலார்மின் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iv. பின்னர், மதியம் 1.00 மணியளவில் லில்லி புளோராவின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை(அ.சா.ஆ.6) தயார் செய்துவிட்டு பிரேதத்தை முதல்நிலை காவலர் திரு.ஜெயச்சந்திரன்(அ.சா.7) மூலமாக பிரேத பரிசோதனைக்காக மருத்துவர் வசம் ஒப்படைத்து, பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உறவினர் வசம் ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளார். பின்னர், முதல்நிலை காவலர் திரு.ஜெயச்சந்திரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்நிலையில், 07.05.2023ம் தேதி மாலை 7.00 மணியளவில் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து பின்னர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

v. பின்னர், இவ்விபத்தில் ஈடுபட்ட TN 57 CX 4546 என்ற பதிவு எண் கொண்ட ராயல் என்பீல்டு வாகனத்தை ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளரின் பார்வைக்கு உட்படுத்தி, ஆய்விற்குப் பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகன ஆய்வு அறிக்கை(அ.சா.ஆ.9) பெற்றுள்ளார். பின்னர், விபத்தில் இறந்துபோன லில்லி புளோராவின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் திரு.தௌசிப் அகமது அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று(அ.சா.ஆ.8) பெற்றுள்ளார். இவ்வழக்கில் தனது புலன்

விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.** அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவியபோது, எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்றும், பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ முன்னிடப்படவில்லை.

**6.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுதிநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கடந்த 04.05.2023–ம் தேதி காலை 8.30 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரர் திரு.ஜான் கிறிஸ்டியனின் மனைவியான திருமதி.லில்லி புளோரா பழைய கரூர்–திண்டுக்கல் ரோட்டில் ஜெயா பாலி கிளினிக் அருகே ரோட்டின் ஓரமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரி TN 57 CX 4546 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பில்டு புல்லட்டை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிச் சென்று மேற்படி லில்லி புளோராவின் பின்புறம் மோதி விபத்து ஏற்படுத்தி. மேற்படி லில்லி புளோராவிற்கு மரணத்தை விளைவித்துள்ளார் என்றும், எதிரியின் மேற்படி குற்றச் செயல்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தகுந்த தண்டனை வழங்குமாறு வேண்டினர்.

**7.** கற்றறிந்த எதிரியின் வழக்கறிஞர் அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல் விபத்து நடைபெறவில்லை என்றும், எதிரி தனது இரு சக்கர வாகனத்தை

அஜாக்கிரதையாகவோ, பொருந்தா வேகத்துடனோ அல்லது அசட்டை துணிவுடனோ ஓட்டி வரவில்லை என்றும், விபத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகளில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் மட்டுமே விபத்து நடைபெற்ற விதம் பற்றி சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3ம் தங்களது சாட்சியத்தில், எதிரி அவரது வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தார் என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எந்த இடத்திலும் எதிரி அவரது வாகனத்தை பொருந்தா வேகத்துடனோ அல்லது அசட்டை துணிவுடனோ அல்லது கவனக் குறைவாகவோ ஓட்டி வந்ததாக சொல்லவில்லை என்றும், நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றமும், நமது மாண்புமிகு உயர்நீதிமன்றமும் பல வழக்குகளில் எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டி வந்ததாக சாட்சியம் அளித்துள்ளதை மட்டும் வைத்து எதிரியை இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் படி குற்றவாளி என தீர்மானிக்க இயலாது என்று உத்தரவிட்டுள்ளது என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வேண்டினார்.

8. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன லில்லி புளோராவின் கணவரும், இவ்வழக்கின் புகார்தாரருமான திரு.ஜான் கிறிஸ்டியன் அ.சா.1 ஆகவும், விபத்தை நேரில் பார்த்ததாக திரு.தவாசாம்ஜோபு மற்றும் திருமதி.வேளாங்கன்னி ஆகியோர் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகவும், விபத்து பற்றி கேள்விப்பட்டதாக இறந்துபோன லில்லி புளோராவின் மகனான திரு.சாலமன் ஆலன் ரூபன் அ.சா.5 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகளான திரு.ராபர்ட் பெல் ஆர்மின் மற்றும் திரு.ராஜ்குமார் ஆகியோர் அ.சா.6 மற்றும் அ.சா.4 ஆகவும், பிரேத பரிசோதனை அலுவலில் ஈடுபட்ட முதல்நிலை காவலர் திரு.ஜெயச்சந்திரன் அ.சா.7 ஆகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் அ.சா.8

ஆகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.பாலாண்டி அ.சா.9 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

**9.** இவ்வழக்கு விபத்து எதிரி அவரது வாகனத்தை கவனக்குறைவாகவும், அசட்டைத் துணிவுடனும் இயக்கியதாலேயே ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கும் பட்சத்திலேயே எதிரியை இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)–ன் படி குற்றவாளி என தீர்மானிக்க முடியும். மேலும், வழக்கு விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளால் மட்டுமே விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றியும், விபத்து யாருடைய கவனக்குறைவினாலும், அசட்டைத் துணிவாலும் ஏற்பட்டது என்பதையும் கூற முடியும்.

**10.** அ.சா.1 மூலமாக இவ்வழக்கு விபத்து பற்றி அவர் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடப்பட்டுள்ளது. அ.சா.1 திரு.ஜான் கிறிஸ்டியன் மற்றும் அ.சா.5 திரு.சாலமன் ஆலன் ரூபன் ஆகியோரின் சாட்சியங்களையும் அ.சா.ஆ.1 ஆன புகார் மனுவையும் பரிசீலிக்க, அ.சா.1 மற்றும் அ.சா.5 விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது என்பதும், விபத்து பற்றி கேள்விப்பட்டதை வைத்தே அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதும் புலனாகிறது. மேற்படி சாட்சிகள் விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்பதால், விபத்து நடைபெற்ற விதம் குறித்து அவர்கள் அளித்துள்ள சாட்சியம் சட்டப்படி ஏற்புடைய சாட்சியம் கிடையாது.

**11.** இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அரசு தரப்பில் அ.சா.2 திரு.தவாசாம் ஜோபு மற்றும் அ.சா.3 திருமதி.வோளங்கன்னி ஆகியோர் மட்டுமே முன்னிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் அ.சா.3 திரு.வேளாங்கன்னி தனது சாட்சியத்தில் கடந்த 04.05.2023ம் தேதி காலை 8.00 மணியளவில் NS நகர் அருகில் பேருந்தில் இருந்து இறங்கினேன் என்றும், பேருந்தை விட்டு இறங்கியவுடன் ஒரே கூட்டமாக இருந்தது என்றும், தான் சென்று பார்த்தபோது, லட்டுமணன் என்பவர் புல்லட் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து

மோதியதில், லில்லிபுளோரா என்பவருக்கு தலையில் இரத்தக் காயம் இருந்தது என்றும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** அ.சா.3ன் முதல் விசாரணை சாட்சியத்தில் இருந்து, அ.சா.3 விபத்தை நேரில் பார்த்தாரா அல்லது விபத்து நடந்தவுடன் விபத்து நடந்த இடத்திற்கு சென்ற வகையில் விபத்து பற்றி தெரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறாரா என்பது புலனாகவில்லை. அ.சா.3ன் குறுக்கு விசாரணையின் போது, விபத்து பற்றி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல என்றும், பேருந்தை விட்டு இறங்கும்போது, விபத்து நடந்து அனைவரும் சம்பவ இடத்தை நோக்கி ஓடினார்கள் என்றும், தானும் பின்னால் ஓடினேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** இத்தருணத்தில் அ.சா.3க்கும் இறந்துபோன லில்லி புளோராவிற்கும் உள்ள உறவு முறையை கருத்தில் கொள்வது அவசியமாகிறது. அ.சா.3 தனது குறுக்கு விசாரணையின் போது தான் விபத்தில் இறந்தவர் தனது மனைவியின் அக்கா என்பதை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அ.சா.3 தனது சாட்சியத்தில் விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்தில் இருந்து இறங்கியதாக கூறியுள்ளதை கருத்தில் கொண்டு விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் ஏதேனும் உள்ளதா என்பதை அறியும் பொருட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை பரிசீலிக்க, மேற்படி ஆவணங்களில் விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் இருப்பது போல் எந்த இடத்திலும் காட்டப்படவில்லை. மேலும், அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரி இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து மோதியதாக சொல்லியுள்ளாரே தவிர, எதிரி எந்த திசையில் இருந்து வந்தார் என்பது பற்றியோ, லில்லி புளோரா மீது முன்புறம் மோதினாரா அல்லது பின்புறம் மோதினாரா என்பது பற்றியோ விளக்கமாக எதுவும் சொல்லவில்லை. அவ்வாறான நிலையில், அ.சா.3 விபத்தை நேரில் பார்த்தாரா என்பது சந்தேகம் கொள்ளும் வகையிலேயே உள்ளது.

**14.** அ.சா.2 திரு.தவாசாம் ஜோபு தனது சாட்சியத்தில், 04.05.2023ம் தேதி என்ஜிஓ காலனியில் இருந்து அ.சா.1ன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது, NS நகர் ஜெயா பாலி கிளினிக் அருகே தனது சித்தி லில்லி புளோரா நடந்து சென்று கொண்டிருந்தார் என்றும், தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு தனது சித்தியை அழைத்து செல்வதற்காக அருகில் சென்றேன் என்றும், தனது சித்திக்குப் பின்னால் வந்த புல்லட் TN 57 CX 4546 என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்து தனது சித்தியின் பின்புறமாக வந்து மோதிவிட்டார் என்றும், தனது சித்திக்கு தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், தான் தூக்கி பார்த்தபோது அவர் சுயநினைவை இழந்துவிட்டார் என்றும், அருகில் இருந்தவர்கள் உதவியுடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்ததாகவும், அங்கு பரிசோத்தித்த மருத்துவர்கள் தனது சித்தி வரும் வழியிலேயே இறந்துவிட்டார் என்றும் கூறினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** அ.சா.2 மற்றும் அ.சா.3 மட்டுமே விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்டுள்ளனர். அ.சா.3 விபத்தில் இறந்து போன லில்லி புளோராவின் தங்கையின் கணவராவார். அ.சா.2 தனது முதல் விசாரணையிலேயே விபத்தில் இறந்துபோன லில்லி புளோரா தனது சித்தி என்று ஒப்புக் கொண்டுள்ளார். அவ்வாறான நிலையில், அ.சா.2 மற்றும் அ.சா.3–ன் சாட்சியத்தை சற்றே கவனத்துடன் பரிசீலிக்க வேண்டியுள்ளது. மேலே குறிப்பிட்டதைப் போல், அ.சா.3 விபத்தை நேரில் பார்த்தாரா என்பது சந்தேகம் கொள்ளும் வகையிலேயே உள்ளது.

**16.** அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில் எதிரி அவரது வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார் என்று செல்லியுள்ளாரே ஒழிய, எதிரி என்ன வேகத்தில் வந்தார் என்றோ, எதிரி கவனக்குறைவாக ஓட்டி வந்தார் என்றோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எதிரி அவரது வாகனத்தை வேகமாக

ஓட்டி வந்ததாக அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளதை மட்டும் வைத்து எதிரி பொருந்தா வேகத்துடனோ அல்லது அசட்டைத் துணிவுடனோ அவரது வாகனத்தை ஓட்டி வந்ததாக கருத முடியாது. மேலும், எதிரி அவரது வாகனத்தை வேகமாக ஓட்டி வந்ததாக அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளதை மட்டும் வைத்து எதிரி தான் விபத்திற்கு காரணம் என்று தீர்மானித்துவிட முடியாது.

**17.** எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டி வந்ததாக சாட்சியம் அளித்துள்ளதை மட்டும் வைத்து எதிரியை இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் படி குற்றவாளி என தீர்மானிக்க இயலாது என்று **1998 (8) SCC 493{State of Karnataka Vs Sathish}** என்ற வழக்கில் நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றமும், **2001 (1) MLJ Crl 852{Sekar Vs. State}** மற்றும் **2017 (1) LW Crl 160 {M.Subramani Vs. State}** ஆகிய வழக்குகளில் நமது மாண்புமிகு உயர்நீதிமன்றமும் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறான நிலையில், மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3ன் மேற்படி சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி பொருந்தா வேகத்துடனோ, அசட்டை துணிவுடனோ அல்லது கவனக்குறைவாகவோ அவரது வாகனத்தை ஓட்டியதனாலே இவ்வழக்கு விபத்து ஏற்பட்டதாக முடிவு செய்ய இயலாது.

**18.** எனவே, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் படியான குற்றங்களை அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**19.** முடிவாக, எதிரி இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**20.** எதிரி எழுதி கொடுத்த பிணைமுறிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சொத்துக்கள் குறித்த உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஜுன் மாதம் 05ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.16 13:39:43 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

**<u>அரசுத் தரப்புச் சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஜான் கிறிஸ்டியன் |
| அ.சா.2 | திரு.தவாசாம் ஜோபு |
| அ.சா.3 | திரு.வேளாங்கன்னி |
| அ.சா.4 | திரு.ராஜ்குமார் |
| அ.சா.5 | திரு.சாலமன் ஞானரூபன் |
| அ.சா.6 | திரு.ராபர்ட் பெல்அர்மின் |
| அ.சா.7 | திரு.ஜெயச்சந்திரன், தலைமை காவலர் |
| அ.சா.8 | திரு.பிரபாகரன், சார்பு ஆய்வாளர் |
| அ.சா.9 | திரு. பாலாண்டி, காவல் ஆய்வாளர் |

**<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.05.2023 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 04.05.2023 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 04.05.2023 | தேதியிட்ட பார்வை மகஜரிலுள்ள அ.சா.6–ன் முதல் கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.4 | 04.05.2023 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | – | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 04.05.2023 | தேதியிட்ட பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 04.05.2023 | தேதியிட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 04.05.2023 | தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 08.05.2023 | தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருள்:</u>** இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.

2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. இந்த வழக்கில் சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை,

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.16 13:39:29 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.